தினத்தந்தி - 23/03/2023

என்ஜினீயரிங் கல்லூரிகள்

# 2023-24-ம் ஆண்டுக்கான அங்கீகாரத்தை புதுப்பிக்கலாம்

## தொழில்நுட்பக்கல்வி கவுன்சில் அறிவிப்பு

சென்னை, மார்ச்.23- நாட்டில் உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட என்ஜினீயரிங் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக்கல்லூரிகளுக்கான அங்கீகாரத்தை அகில இந்திய தொழில்நுட்பக்கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

அந்த வகையில் 2023-24-ம் கல்வியாண்டுக்கான அங்கீகாரத்தை சம்பந்தப்பட்ட என்ஜினீயரிங் கல்லூரிகள் பெறுவதற்கான நடைமுறை தொடங்கப்பட்டு இருப்பதாக தொழில்நுட்பக்கல்வி கவுன்சில் அறிவித்துள்ளது. அதன்படி, வழிகாட்டு கையேடு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள விதிகளை முறையாகப் பின்பற்றி அங்கீகாரத்தை புதுப்பித்தல், நீட்டிப்புக்கான அனுமதி கோரி கல்வி நிறுவனங்கள் அடுத்த மாதம் (ஏப்ரல்) 6-ந்தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றும், நிகர்நிலை பல்கலைக்கழகங்களும் தங்கள் செயல்பாடுகளை தொடருவதற்கும் ஏ.ஐ.சி.டி.இ. அனுமதி பெறுவது அவசியம் என்றும், அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி பெறாத கல்லூரிகள் மீது சட்டவிதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அகில இந்திய தொழில்நுட்பக்கல்வி கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதேபோல், கல்வி நிறுவனங்கள் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (என்.ஐ.ஆர்.எப்.) தரவரிசையில் பங்கேற்பதும், 'நாக்' அங்கீகாரம் பெறுவது கட்டாயமாக்கி இருக்கிறது எனவும், இதற்குக் கல்வி நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் அறிவுறுத்தியிருக்கிறது.